# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு III – 2017

## தீங்கியற் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் **<u>நான்கு (04)</u>** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. "பெரும்பாலான நாடுகளில், நிதிசார் இழப்பீட்டினைப் பெறுவதற்கான மூலோபாயமொன்றாகவும் பகிரங்க உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களினுடைய அதிகளவிலானதான பொறுப்புக் கூறலினை ஊக்குவித்து, எச்சரிக்கும் தாக்கங்கள் சிலவற்றை ஏற்படுத்துகின்றவொன்றாகவும் தீங்கியலிலான (delict or tort) குடியியல் வழக்குகள் தீவிரமாக தொடரப்படுகின்றன"

   (S.W.F Goonesekera, *Fundamental Rights and the Law of Delict,* Extracted from Essays in honor of H. L. De Silva P.C., Human Rights, Human Values and the Rule of Law, Edited by A.R.B. Amarasinghe and S.S. Wijeratna, Legal Aid Foundation Colombo 2013, p.52 – 70).

   தீங்கியற் சட்டத்தின் (law of delict or tort) கோட்பாடுகளின் பரப்பெல்லை மற்றும் பிரயோகத்தினை விரிவாக்குவதற்கு, பகிரங்க உத்தியோகத்தர்கள் அல்லது நிறுவனங்களினுடைய தீங்கியல் பொறுப்புடமை எழுகின்ற வழக்குகளைத் தீர்ப்பதில் உரிமைகள் சார்ந்த அணுகுமுறையொன்றானது (rights based approach) எவ்வாறான பங்களிப்பினை வழங்கியுள்ளது என்பதனை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

2. ரவி என்பவன் ஆஸ்பெஸ்டாஸ் (asbestos) கூரைத் தகடுகள் மற்றும் ஏனைய கைத்தொழில் உபகரணங்கள் என்பவற்றை உற்பத்தி செய்கின்ற "ரெக்னோ றூபிங் புரடக்ஸ் லிமிடெட்" (Techno Roofing Products Limited) இனுடைய சொந்தக்காரனாவான். அவனுக்கு 25 வருடங்களுக்கு மேலாக தொழிற்சாலை

மேற்பார்வையாளராகக் கம்பனியில் பணியாற்றிய சமன் என்பவன் நுரையீரல் புற்றுநோய் காரணமாக கொழும்பிலுள்ள வைத்தியசாலையொன்றில் மரணமடைந்துள்ளான் என அவனுடைய முகாமையாளரான அனில் என்பவனால் தகவல் அளிக்கப்பட்டது. அவர்களுடைய ஊழியர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு ஆடை மற்றும் பாதுகாப்பு உபகரணம் என்பவற்றின் தரம் தொடர்பில் பெறப்பட்ட முறைப்பாடுகளை தொடர்ந்து புறக்கணிப்பது புத்திசாலித்தனமானதல்ல என அனில் ரவியை எச்சரித்தான். சமனுடைய மரணத்திற்கு அவனுடைய அதிகப்படியான புகைப்பிடித்தல் காரணமாக அமைந்திருக்குமென ரவி அதற்கு பதிலளிக்கும் வகையில் தெரிவித்தான். சமனுடைய மனைவியான அனுலா ரவிக்கெதிராக குடியியல் வழக்கினை தாக்கல் செய்ய தற்போது விரும்புகின்றாள்.
உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்ற புற்றுநோயினை ஏற்படுத்துகின்ற பதார்த்தங்களிலிருந்து அவனுடைய ஊழியர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவன் தவறி விட்டான் என அவள் குற்றஞ் சாட்டுகின்றாள். ஐந்து வருடங்களுக்கு முன்னரே சமன் புகைப்பிடிப்பதனை நிறுத்தி விட்டான் எனவும் ஆஸ்பெஸ்டர்ஸ் தூசிற்கு முகங்கொடுத்தமையே அவனுடைய மரணத்திற்கான அண்மித்த காரணம் எனவும் அவள் வாதிடுகின்றாள். சமனின் மரணத்தினால் எற்பட்ட ஆதரவிழப்பு (loss of support), சுகவாழ்விழப்பு (loss of consortium), வலி மற்றும் துன்பம் (Pain and suffering) என்பவற்றிற்கு சேதவீட்டினைப் பெற அனுலா விரும்புகின்றாள். ஆஸ்பெஸ்டர்ஸ் தூசானது சமனுடைய மரணத்திற்கு பங்களிப்புச் செய்யும் காரணிகளில் ஒன்று மட்டுமேயாகும் என மருத்துவ அறிக்கைகள் வெளிப்படுத்தின. அதே நேரத்தில், சமன் ஒருபோதும் அனுலாவினை சட்டரீதியாக திருமணம் செய்திருக்கவில்லை என ரவி கண்டறிந்தான்.

கட்சிக்காரர்களுக்கு ஆலோசனை வழங்குக.

3. சாம் என்பவன் அவனுடைய உதவியாளரான ராம் என்பவனுடன் தாங்கியொன்றில் எரிபொருளைக் கொண்டு சென்றான். தகர தகடுகளைக் (tin sheets) கொண்டு செல்கின்ற டிரக் வண்டியினைச் செலுத்திய மது போதையிலிருந்த வாகன ஓட்டுனரொருவர் கவனயீனமாக சாமின் வாகனத்துடன் மோதியதுடன் பாரிய வெடிப்புச் சம்பவமொன்று ஏற்பட்டது. சிறிய காயங்களுடன் விபத்திலிருந்து மதுபோதையிலிருந்த சாரதி உயிர் பிழைத்தார். விபத்திலிருந்தான பிரதானமாக உருகிய உலோகத்தினால் ஏற்பட்ட கடும் எரிகாயங்களுக்கு சாம் மற்றும் ராம் ஆகிய இருவரும் உள்ளானதுடன் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மயக்கமடைந்திருந்த ராம் மற்றும் சாமினை எடுத்துச் சென்ற வாகனமானது வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் எதிர்ப்பு ஊர்வலமொன்றில் 45 நிமிடங்களுக்கு அகப்பட்டுக் கொண்டது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட உடனேயே, சாம் இறந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்ததுடன் வைத்தியசாலையில் அவனை அனுமதிப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம் மற்றும் கடுமையான எரிகாயங்களின் காரணமாக மரணம் ஏற்பட்டதென்றார். சாமின் உடலில் ஏறத்தாழ 60 சதவீதமான பகுதி எரிவடைந்திருந்தது.

35 சதவீதம் மட்டுமேயான எரி காயங்களுடன் ராம் உயிர் பிழைத்ததுடன் மது போதையிலிருந்த வாகன ஓட்டுனருக்கெதிராக வழக்கு நடவடிக்கையினை முன்னெடுத்தான். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இரு வருடங்களின் பின்னர் புற்றுநோயின் காரணமாக அவன் இறந்தான். விபத்தின் போதான ராமிற்கு ஏற்பட்ட காயத்தினால் தூண்டப்பட்டதான முன் - புற்றுநோய்க்கான உயிரணுக்கள் ராமின் உதடுகளில் காணப்பட்டதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவித்தன.

மதுபோதையிலிருந்த வாகன ஓட்டுனருடைய பொறுப்புடைமையின் அளவினைத் தீர்மானிப்பதற்காகப் பிரயோகிக்கக் கூடிய விதிகள் மற்றும் பரீட்சைகளின் பின்னணியில் பிரச்சினைகளை ஆராய்க.

4. 50 வயதான சுசீலா என்பவள் பிரபல்யமான தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராவாள். நன்கு அறியப்பட்ட அழகுசாதன உற்பத்தியாளர்களான 'லவ்லி ஹென்னா' (Lovely Henna) இனால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தலைமயிர் நிறப்பூச்சினை அவள் தெரிவு செய்தாள். அதனைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர், பயன்பாட்டிற்கான அறிவுறுத்தல்களினை அவள் வாசித்துக் கொண்டாள்.
வீட்டில் சுயமாக அத் தயாரிப்பினை அவள் பூசிய போது, அவளுடைய உச்சந்தலையானது வீங்கத் தொடங்கியதுடன் அதன் பின்னர் அவள் மயக்கமடைந்தாள். அவளுக்கு கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டதனை வைத்தியர்கள் கண்டுபிடித்ததுடன் மூன்று வாரங்கள் அவள் வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டது. 'லவ்லி ஹென்னா' இற்கெதிராக வழக்கிட சுசீலா விரும்புகின்றாள். அவளுக்கு ஆலோசனை வழங்குக.

5. “பொதுவான விதியொன்றாக, அதிக ஆபத்து நிறைந்த நடவடிக்கைகள் தொடர்பில் கடும் பொறுப்பினை சுமத்துவதானது நீதிமன்றங்களிலும் பார்க்க, பாராளுமன்றத்தினால் செய்யப்படுவதே மிகவும் பொருத்தமானது என்ற கருத்திற்கு சார்பாக நான் இருக்கின்றேன்.”

(Lord Goff in Cambridge Water Co Ltd v Eastern Counties Leather PLC

[1994] 2 AC 264 [HL])

*Rylands v. Fletcher* இனுடைய பரப்பெல்லை மற்றும் பிரயோகம் என்பனவற்றை மட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் மட்டுப்பாடுகளை ஆராய்க. உமது ஆராய்வானது இலங்கையின் நீதித்துறையின் நிலைப்பாட்டின் மீது ஆகக் குறைந்தது வேறொரு நியாயாதிக்கத்துடன் தொடர்புறுத்தி கவனஞ் செலுத்துவதாக இருத்தல் வேண்டும்.

6. புகழ் பெற்ற வேகப் பந்து வீச்சாளரான சஞ்சே என்பவன் சர்வதேச கிரிக்கெட் போட்டியொன்றின் போது முதுகெலும்பில் காயமொன்றினை ஏற்படுத்திக் கொண்டான். வலி தொடர்ந்து நீடித்தமையினால் எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணரான* மருத்துவர் சில்வாவின் ஆலோசனையினை சஞ்சே பெற்றான். மருத்துவ ஆலோசனையின் போது, நிலைமையானது அங்கவீனத்திற்கு இட்டுச் செல்ல முடியும் எனக் கண்டறிந்த மருத்துவர் சில்வா தாமதமின்றி முதுகெலும்பு சத்திரசிகிச்சையினை மேற்கொள்ளுமாறு சஞ்சேயினை அறிவுறுத்தினார். அவர் வெளிநாட்டிற்கு பிரயாணம் செய்யவிருப்பதால், சத்திரசிகிச்சையினை அவரால் மேற்கொள்ள முடியாது எனக் கூறி மருத்துவர் சில்வா சஞ்சேயினை மருத்துவர் எல்சனிடம் பரிந்துரை செய்தார். சத்திரசிகிச்சையினுடைய ஆபத்து தொடர்பில் மருத்துவர் சில்வாவிடம் சஞ்சே வினவிய போது, சஞ்சே நிரந்தர அங்கவீனராவதற்கு 10 சதவீத வாய்ப்புக் காணப்படுவதாக அவர் கூறினார். அவன் பின்னர் மருத்துவர் எல்சனுடன் கலந்தாலோசனை செய்தான். அவனுடைய ஆபத்து தொடர்பான வினாக்களுக்கு பதிலளிக்க மறுப்புத் தெரிவித்ததுடன் நைரோகி வைத்தியசாலையில் வைத்து சத்திரசிகிச்சைக்கான சம்மதம் பெறப்பட்டது. கிருமிகளின்றி சுத்தம் செய்யப்படாத சத்திரசிகிச்சை உபகரணங்களினை அது தொடர்பான அறிவின்றி வைத்தியர் எல்சன் பயன்படுத்தியிருந்தார். சத்திரசிகிச்சையானது வெற்றியளிக்கவில்லை. மேலதிகமாக, சஞ்சேயிற்கு நோய்த் தொற்று விருத்தியடைந்ததுடன், அதன் காரணமாக அவன் உணர்வற்ற நிலைக்கு ஆளானான்.

சஞ்சேயுடன் அடிக்கடி சமூக வலைத்தளங்களில் உரையாடுபவளான அவனுடைய தீவிர இரசிகையொருவளான நிலானி, வைத்தியசாலையானது அந்த விளையாட்டு வீரரைப் பார்ப்பதற்கு அவளை அனுமதிக்க வேண்டும் என வற்புறுத்தினாள். அவனுடைய உணர்வற்ற நிலையினைப் பார்த்ததன் பின்னர், நிலானி பேரிடிக்குள்ளானதுடன் அவளுடைய நிலைமையானது தற்போது நோயியல் துயரத்திற்கு (pathological grief) இட்டுச் சென்றுள்ளதாக அவளுடைய பெற்றோர் கோருகின்றனர்.

சாத்தியமான அனைத்து பிரதிவாதிகளுக்கு எதிராகவும் வழக்கு நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு சஞ்சே மற்றும் நிலானியினுடைய பெற்றோர் விரும்புகின்றனர். ஆலோசனை வழங்குக.

*எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் என்போர் தசை - என்பு மண்டல அமைப்பினைப் பாதிக்கும் காயங்கள் மற்றும் நோய்களுக்கு சிகிச்சை வழங்குபவர்கள் ஆவர்.

7. முன்னணிச் சிங்களச் செய்தி வெளியீடான “தவச” (Dawasa) ஆனது பத்திரிகையின் முதற் பக்கத்தின் இரு மருங்குகளிலும் இரு செய்திகளை வெளியிட்டிருந்தது. தொழிற்கட்சியின் முன்னணி அரசியல்வாதியான சாம் என்பவன் தனியார் பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் பெற்ற அவனது மருமகனினது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட செய்தியொன்றினை வெளியிட்டிருந்தது. செய்திக் கட்டுரையின் தலைப்பாக மேற்கோள் காட்டப்பட்ட தொழிற் கட்சியினால் ஒழுங்கமைக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழக எதிர்ப்பு பிரச்சாரத்தில் மற்றைய உறுப்பினரொருவர் தனியார் கல்வி நிறுவனங்களினைப் பற்றி இழிவான கருத்துக்களினைக் தெரிவிக்கையில் அதனை செவிமடுத்தவாறு சாம் பிரதான மேசையில் அமர்ந்திருக்கின்ற புகைப்படத்தினை மற்றைய செய்திக் கட்டுரை வெளியிட்டிருந்தது. அவ்விரு ஆக்கங்களும் ஒன்றையொன்று மேற்கோள் காட்டவில்லையாயினும், அவை முதற்பக்க நையாண்டிப் பகுதியில் முதனிலைப்படுத்தப்பட்டிருந்தன. ‘தவச’ இனுடைய சகோதர வெளியீடான இலத்திரனியல் செய்தித்தாளான (e-newspaper) ‘ஹவச’ இல் அச் செய்திகள் அதே மாதிரியில் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டிருந்தன.

ஒரு வாரத்தின் பின்னர், இச் செய்தி வெளியிடப்பட்ட செய்தித்தாளின் முதற் பக்கமானது, செய்தித்தாளின் ஊக்குவிப்பு தொலைக்காட்சி விளம்பரமொன்றில் செய்தித்தாளினை 'நியாயமான மற்றும் துணிவுள்ள' பத்திரிகைத் துறை என எடுத்துக் காட்ட பயன்படுத்தட்டிருந்தது. விளம்பரமானது அப் பக்கத்தினுடைய நிலையான பிரதியொன்றை 20 செக்கன்களுக்கு பின்னணிக் குரலுடன் காண்பித்தது. வெளியீட்டின் பின்னர் இடம்பெற்ற இந் நிகழ்வுகளினால் எரிச்சலடைந்ததனால், 'தவச' மற்றும் 'ஹவச' இற்கு எதிராக அவதூறு (defamation) இற்கான வழக்கினை தொடருவதற்கு சாம் விரும்புகின்றான்.

நீதிமன்றில் தமக்காக எதிர் வழக்காடுமாறு தாய் கம்பனியானது உம்மை கோரியுள்ளது. 'தவச' மற்றும் 'ஹவச' இனால் அவர்களுடைய வழக்கினை ஆதாரப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய வாதங்களினை வரைக. பொருத்தமான சட்டக் கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தினை மேற்கோள் காட்டுமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

*****